பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 04 2024 6 45

திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.
- இந்தியப் பொருளாதாரம் மிகப்பெரிய அளவில் வளர்ச்சி பெற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசே காரணம் என்று பிஜேபி கூறியுள்ளது.
- 2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது பிஜேபி அளித்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.
- தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில்தான் ஏராளமான அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.
- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 33 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

மக்களவைத் தேர்தலின் முதற்கட்ட வாக்குப்பதிவுக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிஜேபி தலைவர் திரு. ஜே.பி. நட்டா, தமிழகத்தில் நேற்று சிதம்பரம், கரூர், திருச்சி, விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பிரச்சாரம் செய்தார்.

திருச்சியில் நேற்று மாலை திறந்த வாகனத்தில் சென்று வாக்காளர்களிடையே அவர் ஆதரவு திரட்டினார்.

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் நேற்றிரவு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், உலக அளவில் இந்தியப் பொருளாதாரம் மிகப்பெரிய அளவில் வளர்ச்சி பெற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான பிஜேபி அரசே காரணம் என்று கூறினார்.

இந்தியாவுக்கான உற்பத்தி இயக்கத்தின் சார்பில் உள்நாட்டிலேயே ஏராளமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி கணிசமாக தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள், இளைஞர்கள், மகளிர் என பல்வேறு தரப்பினருக்கு ஏற்ற வகையில் நலத்திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது பிஜேபி அளித்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை குற்றம்சாட்டினார்.

நாகர்கோவிலில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை பன்மடங்கு உயர்ந்துவிட்டதாகக் கூறினார்.

மாநிலத்தின் உரிமைகளை மத்திய அரசு பறித்து வருவதாகவும் அவர் குறை கூறினார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி நேற்று திருவள்ளூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சியின்போது தமிழகத்தில் 11 மாவட்டங்களில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் நிறுவப்பட்டதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களை திமுக அரசு நிறுத்திவிட்டதாகவும் அவர் குறை கூறினார்.

மாநிலத்தில் போதைப் பொருட்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும், அதைக் கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கிருஷ்ணகிரியில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், தமிழகத்தில் திமுகவும், அஇஅதிமுகவும் மக்களுக்கு இலவச திட்டங்களை அறிவித்தபோதும், இன்னும் மாநிலத்தில் வறுமை நிலை முற்றிலும் அகலவில்லை என்று கூறினார்.

மாநிலம் முழுவதும் நீர்நிலைகளில் மணல் மற்றும் வண்டல் மண் அதிக அளவில் எடுப்பதால் சுற்றுச்சூழல் சீர்கேடடைந்து நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ், அஇஅதிமுக, பிஜேபி மற்றும் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று தங்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

வேட்பாளர்களை ஆதரித்து கட்சித் தலைவர்களும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து இம்மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ளது.

<<<<>>>>

கௌரவ விரிவுரையாளர்களை உதவிப் பேராசிரியர்களாக பணி நிரந்தரம் செய்வது தொடர்பான தேர்வு நடைமுறைகளை 3 மாதங்களுக்குள் முடிக்க தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களாக பணியாற்றியவர்களை உதவிப் பேராசிரியர்களாக பணி நியமனம் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், ஆட்சி மாற்றம் காரணமாக இந்த நடைமுறைகள் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும், தற்போது 4 ஆயிரம் உதவிப் பேராசிரியர்கள் தேர்வு தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கு தடை விதிக்கக் கோரியும் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி ஆயிரத்து 146 கௌரவ விரிவுரையாளர்களை உதவிப் பேராசிரியர்களாக பணி நிரந்தரம் செய்வது தொடர்பான தேர்வு நடைமுறைகளை 3 மாதங்களுக்குள் முடிக்க உத்தரவிட்டது.

<<<<>>>>

விருதுநகர் அருகே நேற்றிரவு ஆம்னி பேருந்து கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

தென்காசியில் இருந்து கோவை நோக்கி சென்றுகொண்டிருந்த ஆம்னி பேருந்து தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த பாலத்தில் செல்லும்போது இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த 19 பயணிகள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

<<<<>>>>

தமிழகத்தின் வட மற்றும் உள் மாவட்டங்களில் வெப்பநிலை 5 டிகிரி செல்சியஸ் உயரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று வெப்பநிலை 39 டிகிரி செல்சியசாக இருக்கக்கூடும் என்றும், கடலோர மாவட்டங்களில் அனல் காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் கோவை மாவட்டத்தின் சில இடங்களில் நேற்று லேசான மழை பெய்தது.

இருப்பினும் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவியது.

தென் தமிழக மாவட்டங்கள், வட தமிழகத்தின் டெல்டா மாவட்டங்கள், மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

தெற்கு காஸா திட்டுப் பகுதியில் இருந்து ராணுவ வீரர்களை இஸ்ரேல் விலக்கிக்கொண்டுள்ளது.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலத்தில் பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள தரன்தரன் பகுதியில் 350 கிராம் எடையுள்ள ஹெராயின் போதைப் பொருளை எல்லை பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தின் சுக்மா மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதியில் செயல்பட்டு வந்த நக்சல் தீவிரவாதிகளின் முகாமை பாதுகாப்புப் படையினர் அழித்ததோடு, அங்கிருந்து ஏராளமான வெடிமருந்துகளையும் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி நாளை சென்னையில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளதால் நாளையும், நாளை மறுநாளும் நகரில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சேலம் மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு குழுவினரின் வாகன சோதனை பணிகள் முறையாக நடைபெறுகிறதா என மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி பிருந்தா தேவி நேற்றிரவு திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் நேற்றிரவு நடைபெற்ற கருடசேவை நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ராஜ்நாத் சிங் இன்று நாமக்கல் நகருக்கு வருகை தர இருப்பதால் ட்ரோன்கள் பறக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 33 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் விளையாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 163 ரன் எடுத்தது.

164 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, 18 புள்ளி 5 ஓவரில் 130 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

முன்னதாக மும்பையில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 29 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஸ்பெயினில் உள்ள மாண்டிகார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றுக்கு இந்தியாவின் சுமித் நாகல் முன்னேறி உள்ளார்.

நேற்று நடைபெற்ற கடைசி தகுதிச் சுற்றுப் போட்டியில் அவர், 7-5, 2-6, 6-2 என்ற செட் கணக்கில் அர்ஜெண்டினாவின் டையஸ் அக்கோஸ்டாவை வென்றார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி – பெங்களூரு அணியை வீழ்த்தியது.

<<<<>>>>

பெர்த்தில் நடைபெற்ற ஆடவர் ஹாக்கி தொடரின் இரண்டாவது போட்டியில் ஆஸ்திரேலியா 4-2 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<>>>>